மூடப்பட்ட ஆலயங்களும் முடங்கிப்போன ஆத்துமாக்களும்

வேதஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார்

கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று நம் முன்னோர்கள் சொல்வதுண்டு. ஆனால், இன்று ஊரெங்கும் கோவில்கள் இருந்தாலும், முன்னொருபோதும் இல்லாத விதத்தில் எல்லாமே மூடப்பட்டும், மனிதர்கள் வீட்டுக்குள்ளேயே முடக்கப்பட்டும் இருக்கும் முடமான நிலைமையை, நம்முடைய கண்களினால் காணவே முடியாத கொரோனா என்னும் கிருமிகள் ஏற்படுத்தியுள்ளன. இதனால் கிறிஸ்தவர்களும், ஆலயங்கள் மூடப்பட்டதினால் சபையே அழிந்து விட்டது என்று அழுதுகொண்டும், தேவன் சபையை தண்டித்துவிட்டார் என்று அலறிக்கொண்டும், சபையே தேவையில்லை என்று ஆன்லைனில் (இணையத்தில்) ஆர்ப்பரித்துக்கொண்டும் இருக்கின்றனர். இதனால், சபையைப்பற்றிய ஒரு சில வேதாகம சத்தியங்களை நாம் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாயுள்ளது.[1] அதாவது, சபை என்றால் என்ன? ஆலயக் கதவுகள் மூடப்பட்டதினால், சபைக்கு முடிவு வந்துவிட்டதா? சபையைத் தேவன் தண்டித்து விட்டாரா? கோவில் கதவுகளைப்பற்றி கொரோன கிருமிகள் சொல்லும் கதைகள் என்ன? என்று வேதாகமத்தின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியமாய் உள்ளது.

கதவுகள் மூடப்பட்டாலும் சபையின் கதை முடிவடையவில்லை

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் சபையை ஒரு கட்டிடம், அதாவது “ஆலயக் கட்டிடம்” என்றே எண்ணுகின்றனர். அதாவது, வாராவாரம் தாங்கள் தேவனை ஆராதிப்பதற்காகக் கூடிவரும் இடமே சபை என்று எண்ணுகின்றனர். இதனால்தான், தாங்கள் வழக்கமாகத் தேவனை ஆராதிக்கும் ஆலயத்தின் கதவுகள் மூடப்பட்டிருப்பதினால், சபையே அழிந்துவிட்டது என்னும் கவலையில் கதறுகின்றனர். ஆனால், சபை ஒரு ஆலயக் கட்டிடமோ அல்லது ஒரு இடமோ அல்ல. ஏனெனில், வேதாகம சத்தியத்தின்படி கிறிஸ்தவர்களாகிய நாமே சபையாக இருக்கின்றோம். இதனால்தான், சபை என்பதற்கு “எக்ளீசியா” என்னும் கிரேக்கச் சொல் வேதாகமத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது. இது, “எக்” “காலெயோ” என்னும் இரண்டு கிரேக்கச் சொற்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள சொல்லாகும். இதில் “எக்” என்பது “வெளியே” என்றும் “காலெயோ” என்பது “அழைத்தல்’ என்றும் அர்த்தமுடைய சொற்களாகும். எனவே, இவ்விரு சொற்களும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ள “எக்ளீசியா” என்னும் சொல், “வெளியே அழைக்கப்பட்டவர்கள்” என்னும் அர்த்தமுடையது. கிரேக்க இலக்கியங்களில் இச்சொல், தற்கால நாடாளுமன்ற கூடுதல்களைப் போன்றதாக, அதாவது, அரசியல் அதிகாரிகள் ஒன்றுகூடி வருவதற்கே உபயோகிக்கப்பட்டிருந்தாலும், புதிய ஏற்பாட்டில், இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியின் மூலம் பாவத்திலிருந்தும் உலகத்திலிருந்தும் சாத்தானின் பிடியிலிருந்தும் வெளியே கொண்டுவரப்பட்ட மக்களே சபையாக உள்ளனர்.[2] இதனால், மனிதர்கள் ஓரிடத்தில் ஒன்றாகக் கூடிவரும்போது மாத்திரமே சபை மானிட கண்களுக்குத் தென்படக்கூடிய விதத்தில் இருக்கின்றது. ஏனெனில், சபை என்பது மூடித் திறப்பதற்குத் தெரு மூலையில் இருக்கும் ஒரு கட்டிடம் அல்ல. கிறிஸ்தவர்களாகிய நாமே சபையாக இருக்கின்றோம்.

கிறிஸ்தவர்களாகிய நாமே சபையாக இருக்கின்றோம் என்பதை அறியாததினாலேயே கொரோனா கிருமிகள் மனிதரைக் கொல்வதோடு, சபையையும் அழித்துவிட்டது என்று கிறிஸ்தவர்கள் கவலைப்பட்டு கலங்குவதற்கான காரணமாய் உள்ளது. மேலும், கிறிஸ்தவர்களாகிய நாம் சபையாக இருப்பது மாத்திரமல்ல, சபையாகிய நாம் இயேசுகிறிஸ்துவின் சரீரமாகவே இருக்கின்றோம். இதனால்தான், “சபையாகிய சரீரம்” (கொலொ.1:18), “சரீரமான சபை” (எபே.1:23) என்னும் சொற்பிரயோகங்கள் சபையைக் குறிப்பிட வேதாகமத்தில் உபயோகிக்கப் பட்டுள்ளன. ஏனெனில், இரட்சிக்கப்படும் மக்களைச் சபையில் சேர்க்கும் இயேசுகிறிஸ்து (அப்.2:47), அவர்களைத் தம்முடைய சரீரத்தின் அவயவங்களாக்குவதின் மூலமாகவே சபையைக் கட்டிவருகின்றார். இதனால்தான், “நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே

---

[1] சபையைப்பற்றிய முழுமையான வேதாகம சத்தியங்கள் விரைவில் வெளிவரும் எனது “திருமறை போதிக்கும் திருச்சபை” என்னும் நூலில் விளக்கப்பட்டுள்ளது.

[2] R.L.Saucy, *The Church in God’s Program*, pp. 11-18; G.D.Badcock, *The House Where God lives*, pp. 27-30; D.Campbell, W.Johnston, J.Walvoord, J.Witmer, *The Theological Wordbook*, p. 56. L.O.Richards, *Expository Dictionary of Bible Words*, pp. 164-165; M.J.Erickson, *Christian Theology*, pp. 10311034; W.Grudem, *Systematic Theology: An Introduction to Biblical Doctrine*, pp. 853-854. S.D.Renn, *Expository Dictionary of Bible words*, pp. 75-76; P.Enns, *The Moody Handbook of Theology*, p. 347.

அவயவங்களாயும் இருக்கிறீர்கள்” (1கொரி.12:27) என்றும், “நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்” (எபே.5:30) என்றும், “அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாய் இருக்கிறோம்” (ரோ.12:5) என்றும் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, “நாம் தொலைதூரத்திலிருந்து இயேசுகிறிஸ்துவோடு தொடர்பு கொள்கிறவர்களாக அல்ல, பிரிக்கமுடியாதபடி அவரோடு இணைந்துவிட்ட அவருடைய சரீரத்தின் ஒரு பகுதியாகவே இருக்கின்றோம்.”[3]

வேதாகம சத்தியத்தின்படி, இரட்சிக்கப்படுகிறவர்களை இயேசுகிறிஸ்து சபையில் சேர்த்து வருகின்றார் (அப்.2:47). எனினும், சபை இயேசுகிறிஸ்துவின் சரீரமாக இருப்பதினால், சபையில் சேர்க்கப்படுபவர்கள் இயேசுகிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாகின்றார்கள். சில கிறிஸ்தவர்கள், உலகிலுள்ள சகல கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கிய உலகளாவிய சபையே இயேசுகிறிஸ்துவின் சரீரமாக வேதாகமத்தில் உவமிக்கப்பட்டுள்ளதாகக் கருதுகின்றனர்.[4] இது உண்மை என்றாலும், ஒவ்வொரு பிரதேசத்திலும் இருக்கும் உள்ளூர்ச் சபையும் தனித்தனியே இயேசுகிறிஸ்துவின் சரீரமாகவே வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால்தான், ரோமர் 12:3-5இல் ரோமில் இருந்த சபையும், 1கொரிந்தியர் 12:27இல், கொரிந்து பட்டணத்தில் இருந்த சபையும் தனியான இயேசுகிறிஸ்துவின் சரீரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.[5] எனவே, சபை இயேசுகிறிஸ்துவின் சரீரமாய் இருப்பதினால், கொல்லும் கொரோனா கிருமிகளோ அல்லது கொத்தும் வெட்டுக்கிளிகளோ, இல்லையென்றால் வேறு எந்த விஷக் கிருமிகளோ வந்தாலும், அல்லது, கொடூரமான யுத்தங்களும் கோரமான இயற்கை அழிவுகளும் ஏற்பட்டாலும் சபை அழியாது. இப்போது ஆலயத்தின் கதவுகளே மூடப்பட்டுள்ளன. ஆனால், இயேசுகிறிஸ்துவின் சரீரமாகிய சபை இணையத்தில் (ஆன்லைனில்) இப்பொழுதும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. எனவே, ஆலயக் கதவுகள் மூடப்பட்டதினால் சபை அழிந்துவிடவில்லை.

கிறிஸ்தவ சபையின் சரித்திரத்தில் இன்றைக்கு ஆலயங்கள் மூடப்பட்டிருப்பதைப் போன்ற நிலைமை இதற்கு முற்பட்ட காலங்களிலும் இருந்தது. குறிப்பாக, கி.பி.64 முதல் 312 வரை ரோம அரசினால் கிறிஸ்தவர்கள் கொடூரமான முறைகளில் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்ட காலங்களிலும் கிறிஸ்தவர்களினால் வாராவாரம் ஆலயங்களில் கூடிவரமுடியாத நிலைமை இருந்தது. இதனால்தான், எபிரெயர் 10:25இல் குறிப்பிட்டுள்ளபடி, அக்காலத்தில் சபை கூடிவருதலை சிலர் விட்டுவிட்டதற்கான காரணங்களில் இதுவும் ஒன்று என்பதை எபிரெயர் 10:32-33 என்னும் வசனங்கள் அறியத்தருகின்றன.[6] இதைப்போலவே, பிற்காலத்தில் யுத்தங்களும் இயற்கை அழிவுகளும் கொள்ளை நோய்களும் ஏற்பட்ட காலங்களிலும், குறிப்பிட்ட காலத்திற்கு சில பிரதேசங்களில் ஆலயங்கள் மூடப்பட்டிருந்தன. உதாரணத்திற்கு, கி.பி.1918-1920இல் ஏற்பட்ட ஸ்பானியக் காய்ச்சலின்போது உலகெங்கும் ஒரு வருஷத்திற்கும் மேலாக மக்களின் வழமையான வாழ்வு பாதிக்கப்பட்ட போதும் பல இடங்களில் மக்களினால் சபையாகக் கூடிவர முடியாதிருந்தது. இதைப்போலவே தற்காலத்திலும் உலகின் பல நாடுகளில் கொரோனா கிருமிகளினால் ஒரு சில மாதங்கள் ஆலயக் கதவுகள் மூடப்பட்டிருந்தாலும், தற்பொழுது படிப்படியாக மறுபடியுமாக கிறிஸ்தவர்கள் சபையாகக் கூடிவரும் நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

சபை இயேசுகிறிஸ்துவின் சரீரமாக இருப்பதினால், உலகில் இயற்கை அழிவுகளும் யுத்தங்களும் கொள்ளை நோய்களும் ஏற்பட்ட காலங்களில் கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிப்பதற்காகக் கூடிவரும் இடங்கள் சில மாதங்கள் மூடப்பட்டிருந்தாலும், சபை அழிந்து போகவில்லை. ஏனெனில், இயேசுகிறிஸ்துவின் சரீரமாகிய சபையை எவராலும் அழிக்கமுடியாது. இதனால்தான், “நான் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை” என்று இயேசுகிறிஸ்துவே தெரிவித்துள்ளார் (மத்.16:18). இயேசுகிறிஸ்துவின் கூற்றில் “பாதாளத்தின் வாசல்” என்பது மரணத்தைக் குறிப்பிடும் உருவகமாகும்.[7] ஏனெனில், இது

---

[3] G.D.Badcock, *The House Where God Lives: Renewing the Doctrine of the Church for Today*, p. 67; E.Mersch, *Theology of the Mystical Body,* pp. 197-198; O.Quick, *The Christian Sacraments*, p. 123; W.Temple, *Christ in His Church*, p. 8.

[4] R.L.Sauce, *The Church in God's Program,* p. 25.

[5] F.J.A.Hort, *The Christian Ecclesia*, p. 146.

[6] P.T.O'Brien, *Hebrews: The Pillar New Testament Commentary*, pp. 370-371.

[7] R.T.France, *Matthew: The New International Commentary on the New Testament*, p. 255; J.F.Walvoord & R.B.Zuck, *The Bible Knowledge Commentary – New Testament*, 57.

கல்லறை என்னும் அர்த்தமுடைய ஷியொல் என்னும் எபிரெயச் சொல்லை அக்கால யூதர்கள் குறிப்பிடும் முறையாக இருந்தது.[8] ஏசாயா 30:10இல் இத்தகைய அர்த்தத்துடன் "பாதாளத்தின் வாசல்" என்னும் சொல் உள்ளது.[9] இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட யூதர்களின் நூல்களிலும் இத்தகைய சொற்பிரயோகம் உள்ளது.[10] மேலும், யோபு 38:17, சங்கீதம் 9:13, 107:18 என்னும் வசனங்களில் நேரடியாகவே மரணவாசல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, தாம் கட்டும் சபைக்கு மரணம் இல்லை, அதாவது அழிவோ முடிவோ இல்லை என்றே இயேசுகிறிஸ்து மத்தேயு 16:18இல் தெரிவித்துள்ளார்."[11] இதனால், சபையில் இருப்பவர்கள் மரிக்கமாட்டார்கள் என்று நாம் கருதலாகாது. ஆனால், சபையில் இருப்பவர்கள் மரித்தாலும் சபை இல்லாமல் போகாது. ஏனெனில், சபையை யாராலும் அழிக்க முடியாது.[12] "சபையை அழிக்கக்கூடிய வல்லமை எதற்கும் இல்லை."[13] "எந்தத் தீய சக்தியினாலும் அதை மேற்கொள்ள முடியாது."[14] எனவே, "சாத்தானின் சகலவிதமான தாக்குதல்களையும் மேற்கொண்டு சபை அழியாமல் இருக்கும் என்றே மத்தேயு 16:18இல் இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்."[15] ஏனெனில், "சபைக்கு முடிவென்பதே இல்லை."[16] இதனால், தற்பொழுது சிறிது காலத்திற்கு ஆலயக் கதவுகள் மூடப்பட்டிருப்பதினால், சபை அழிந்து விட்டது என்று அழுது புலம்புவதில் எவ்வித அர்த்தமும் இல்லை. உண்மையில், இது மிகவும் அறிவீனமான ஒரு செயலாகவே உள்ளது.

சபைகூடிவருதல் தடைப்பட்டாலும் சபை தண்டிக்கப்படவில்லை

கிறிஸ்தவர்களாகிய நாமே சபையாக இருந்தாலும், நாம் வாரந்தோறும் தேவனை ஆராதிப்ப தற்காக் கூடிவரும் ஆலயத்தின் கதவுகள் மூடப்பட்டுள்ளதினால், தேவன் கொரோனா கிருமிகள் மூலம் சபையைத் தண்டித்துவிட்டார் என்று அழுது புலம்புகிறவர்களாகவே பலர் காணப்படுகின் றனர். ஆனால், கொரோனா கிருமிகள் ஆலயத்தை மாத்திரமல்ல, எல்லா கட்டிடங்களையுமே மூடிவிட்டன. எனவே, ஆலயங்கள் மாத்திரம் மூடப்பட்டிருந்தால்தான் கொரோனா கிருமிகள் மூலம் தேவன் சபையைத் தண்டித்துள்ளார் என்று கூறலாம். மேலும், தேவன் இக்கிருமிகள் மூலம் முழு உலகையும் தண்டிக்கின்றார் என்று கூறுவதும் தவறாகும். ஏனெனில், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் மனிதரின் பாவம் முழுமையாக இயேசுகிறிஸ்துவில் தண்டிக்கப்பட்டுள்ள தினால், தேவன் இக்காலத்தில் பாவத்திற்காக மனிதரைத் தண்டிக்காமல் "அவர்கள் மனந் திரும்பிவரும்படி நீடிய பொறுமை உள்ளவராக இருக்கின்றார்" என்றும் (2பேது.3:9), "தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவக்குகிறார்" (2கொரி.5:19) என்றும் வேதாகமம் கூறுகிறது. இதனால்தான், தற்காலத்தில் ஒருவன் பாவம் செய்யும்போது தேவன் அவனைத் தண்டிக்கின்றார் என்றல்ல, "இயேசுகிறிஸ்து அவனுக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவராக இருக்கின்றார்" (1யோவா.2:1-2) என்றே வேதாகமம் கூறுகிறது. எனவே, கிறிஸ்தவர்களாகிய நாம் இவ்வேதாகம சத்தியங்களை சரியான விதத்தில் அறிந்திராவிட்டால், கொடிய கொரோன கிருமிகள் மாத்திரமல்ல, சிறிய கொசுக்கள் நம்மைக் கடித்தாலும் தேவன் தண்டிக்கின்றார் என்று கதறுகிறவர்களாகவே இருப்போம்.

வேதாகம சரித்திரத்தின்படி, இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தை ஆரம்பிக்கும் வரை இஸ்ரவேல் மக்கள் நியாயப்பிரமாணக் கட்டளைகளைக் கைக்கொண்டால் ஆசீர்வாதம் இல்லையென்றால் சாபம் என்னும் வாழ்க்கை முறையும் (உபா.28), தீர்க்கதரிசிகள் மூலமாகக் கடுமையாக எச்சரிக்கப்படும் நிலையும் இருந்தது. இதனால்தான், "நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான் வரைக்கும் வழங்கி வந்தது" (லூக்.16:16) என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். ஆனால், இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தபோது, அதுவரை காலமும் மக்கள் செய்த பாவங்களும், அன்றிலிருந்து உலகின் முடிவுவரை

---

[8] D.L.Turner, *Matthew: Baker Exegetical Commentary on the New Testament*, p. 405.

[9] ஏசாயா 30:10இல், "நான் என் பூரண ஆயுசின் வருஷங்களுக்குச் சேராமல் பாதாளத்தின் வாசல்களுக்குட்படுவேன் என்று என் நாட்கள் அறுப்புண்கிறபோது சொன்னேன்" என்று எசேக்கியா கூறினான்.

[10] Wisdom of Solomon 16.13; 3Maccabees 5:51; Psalms of Solomon 16:2.

[11] D.A.Carson, *Matthew: The Expositor's Bible Commentary Volume 8*, p. 370.

[12] W.MacDonald, *Believer's Bible Commentary*, 1267.

[13] L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, p. 425.

[14] D.L.Turner, *Matthew: Baker Exegetical Commentary on the New Testament*, p. 92.

[15] C.L.Blomberg, *Matthew: The New American Commentary*, pp. 253-254.

[16] D.A.Hagner, *Matthew: The Word Biblical Commentary Volume 33*, p. 472.

மனிதர்கள் செய்யப்போகும் பாவங்கள் அனைத்தும் தண்டிக்கப்பட்டன (யோவா.1:29, 1யோவா.2:2).[17] இதனால், தற்காலத்தில் இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியை மையமாகக் கொண்டே தேவன் செயல்படுகிறவராய் இருக்கின்றார். இதனால்தான், இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் தற்காலத்தில் பாவத்திற்காகத் தண்டிக்கப்படுவதில்லை (ரோ.8:1, யோவா.3:36).[18] அவர்கள் பரிசுத்தப்படுவதற்காகச் சிட்சிக்கப்பட்டாலும் (எபி.12:5-7),[19] இது பாவத்திற்கான தண்டனை அல்ல. ஏனெனில், சிட்சை என்பது, பிள்ளைகளைத் திருத்தி நல்வழிப்படுத்துவதற்காக அவர்களைக் கண்டித்து வளர்க்கும் பெற்றோரின் செயல்முறையாகும். மேலும், இது கற்பித்தல், திருத்துதல், எச்சரித்தல் என்பவற்றை உள்ளடக்கியதாகவே இருக்கும்.[20] இதனால் இது தண்டனை அல்ல. ஏனெனில், சிட்சை என்பது அக்காலப் பள்ளிக்கூடங்களில் அல்லது சிறைச்சாலைகளில் கொடுக்கப்படும் தண்டனை போன்ற செயல்முறையாக அல்ல, தன் பிள்ளையை அதிகமாக நேசிக்கும் பாசமுள்ள தகப்பனின் செயலாகவே உள்ளது. எனவே, இது "மனிதருக்குத் தீங்கிழைக்கும் செயலாக அல்ல, அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்தும் அன்பின் செயலாகவே உள்ளது."[21] இதனால்தான், ஆங்கில வேதாகமங்களில் தண்டனை என்னும் அர்த்தமுள்ள "பனிஷ்மன்ட்" (punishment) என்னும் சொல் அல்ல, "டிஸ்சிப்ளின்" (discipline) என்னும் சொல்லே உபயோகிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், எதிரிகளுக்குத் தேவன் கொடுப்பதே தண்டனையாகும். ஆனால், தேவன் எதிரிகளை அல்ல, தம்முடைய பிள்ளைகளையே சிட்சிக்கின்றார். மேலும், "தண்டனை கோபாக்கினையின் வெளிப்பாடாகும். ஆனால் சிட்சை, பாசமுள்ள தகப்பனின் அன்பான செயலாகும்."[22] இதனால், "தண்டனை கொடுக்கும் நீதிபதியின் சாட்டையும், தன் மகனைத் திருத்தும் தகப்பனின் பிரம்பும் வித்தியாசமானவை"[23] என்பதை நாம் கருத்திற்கொள்ளவேண்டியது அவசியம்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் இரட்சிக்கப்படுவதும், அவரை நிராகரிப்பவர்கள் ஆக்கினைக்கு உட்படுவதுமே தேவனுடைய நீதியுள்ள நியாயத்தீர்ப்பாய் இருந்தாலும் (யோவா.3:36),[24] இதில், இரட்சிக்கப்படுவது நிகழ்கால அனுபவமாகவும் ஆக்கினைக்குட்படுவது உலகின் இறுதிகால நிகழ்வாகவும் உள்ளது. ஏனெனில், இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு முதற் தடவை வந்தபோது மனிதரை ஆக்கினைக்குள்ளாய்த் தீர்ப்பதற்காக அல்ல, அவர்களை

---

[17] யோவான் 1:29இல், "யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" எனறான். 1யோவான் 2:2இல், "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[18] ரோமர் 8:1இல், "கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை" என்றும், யோவான் 3:36இல், "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[19] எபிரெயர் 12:5-7இல், அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?" என்று சிட்சையைப்பற்றி குறிப்பிப்பட்டுள்ளது. ஆனால், 6ஆம் வசனத்தில் தண்டிக்கிறார் என்னும் சொல் மூலமொழியின்படி "கண்டிக்கிறார்" என்றே மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், 5ஆம் வசனத்தில் "கடிந்துகொள்ளுதல்" என்பதே 6ஆம் வசனத்தில் விளக்கப்பட்டுள்ளது.

[20] W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 2203; J.F.Walvoord & R.B.Zuck, *The Bible Knowledge Commentary – New Testament*, p. 57. சில ஆராய்ச்சியாளர்கள், சிட்சையில் தண்டனையும் உள்ளடக்கப்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர் (P.T.O'Brien, *Hebrews: The Pillar New Testament Commentary*, p. 464; L.Morris, *Hebrews: The Expositor's Bible Commentary Volume 12*, pp. 136-137; L.O.Richards, *Expository Dictionary of Bible Words*, pp. 228-229). ஆனால் இது, அக்கால பள்ளிக்கூட செயல்முறையையும் பழைய ஏற்பாட்டு நடைமுறையையும் கருத்திற்கொண்ட விளக்கமாகவே உள்ளது. ஆனால், தேவன் நம்மைப் பள்ளிக்கூடத்தில் வைத்து திருத்தும் ஆசிரியராக அல்ல, தம்முடைய சபையாகிய வீட்டில் வைத்து நம்மை வளர்க்கும் அன்புள்ள தகப்பனாகவே இருக்கின்றார். இதனால்தான், எபிரெய நிருப ஆசிரியரும் தேவனுடைய அன்பை அடிப்படையாகக்கொண்டே தேவனுடைய சிட்சையை விளக்கியுள்ளார். அதாவது, தாம் நேசிக்கின்ற பிள்ளையை மாத்திரமே தேவன் சிட்சிக்கின்றார் (எபி.12:6-8) என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார். ஏனெனில், தேவனுடைய சிட்சை தண்டனை அல்ல.

[21] D.Guthrie, *Hebrews: Tyndale New Testament Commentaries*, p. 253.

[22] G.B.Wilson, *New Testament Commentaries Volume 2*, p. 445.

[23] C.Bridges, *Proverbs: Geneva Series of Commentaries*, p. 31.

[24] யோவான் 3:36இல், "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" எனறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இரட்சிப்பதற்காகவே வந்தார் (யோவா.3:17).[25] இதனால்தான், இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத மக்களை வானத்திலிருந்து அக்கினியை இறக்கி கொல்ல விரும்பிய சீடர்களின் கோரிக்கைக்கு அவர் இணங்காததோடு, தாம் மனுஷரை அழிப்பதற்கு அல்ல அவர்களை இரட்சிப்பதற்கே வந்துள்ளதாகத் தெரிவித்தார் (லூக்.9:53-56).[26] ஏனெனில், மனிதர் ஆக்கினைக்கு உட்படுவது இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையின் பின்னர் நியாயத்தீர்ப்பு நாளில் நடைபெறும் காரியமாகவே உள்ளது (அப்.17:31, 2பேது.2:9).[27] இதனால்தான், புதிய ஏற்பாட்டில் நியாயத்தீர்ப்பைப்பற்றிய குறிப்புகள் அனைத்தும் எதிர்கால சொல்லினால் குறிப்பிடப்பட்டுள்ளது.[28] எனவே, தற்காலத்தில் இயேசுகிறிஸ்துவை நிராகரிப்பவர்கள் தேவனுடைய "தயவு பொறுமை நீடிய சாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணி, தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிலே கோபாக்கினையைக் குவித்துக் கொள்ளுகிறார்கள்" (ரோ.2:4-5). அதாவது, இயேசுகிறிஸ்துவை நிராகரிப்பவர்கள் அதற்கான தண்டனையை இப்பொழுது நிகழ்காலத்தில் பெறுகிறவர்களாக அல்ல, நியாயத்தீர்ப்பு நாளில் முழுமையாகப் பெற்றுக்கொள்வதற்காக சேர்த்து வைத்துக் கொள்கிறார்கள்.[29]

இயேசுகிறிஸ்துவை அறிந்தவர்கள் துயரங்களுக்கு ஊடாகச் செல்லும்போது, பாடுகள் அவர்களுடைய விசுவாசத்தைப் பரீட்சிக்கின்றன என்றும், இதன்மூலம் அவர்களுடைய விசுவாசம் பலமடைகிறது என்றும் புதிய ஏற்பாடு கூறுகிறது (யாக்.1:2-3).[30] இதை கி.பி.312ஆம் ஆண்டு வரை கிறிஸ்தவர்களில் காணக்கூடியதாக இருந்தது. ஏனெனில், அக்காலத்தில் ரோம அரசாங்கம் கிறிஸ்தவர்களைக் கொடூரமாகச் சித்திரவதை செய்ததினால் ஏறக்குறைய 6500 பேர் கோரமாகக் கொல்லப்பட்டனர்.[31] ஆனாலும், அவர்கள் இயேசுகிறிஸ்துவுக்காக இரத்த சாட்சிகளாக மரித்தார்களே தவிர பாவத்திற்காகத் தண்டிக்கப்பட்டவர்களாக இருக்கவில்லை. மேலும், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த யோபு என்னும் பக்தனுடைய அனுபவமும் இதைப்போலவே உள்ளது. ஏனெனில், அவன் பாவம் எதுவும் செய்யாதவனாக இருந்ததினால் (யோபு.1:1), அவனுக்கு ஏற்பட்ட பாடுகள், பாவத்திற்கான தண்டனையாக அல்ல, அவனுடைய விசுவாசத்தைப் பரீட்சித்துப் பலப்படுத்துகிறவைகளாக இருந்துள்ளதை அவனுடைய சரிதை அறியத்தருகின்றது. இதனால்தான், "அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" (1பேது.1:7) என்று வேதாகமம் கூறுகிறது.

சில கிறிஸ்தவர்கள் 1பேதுரு 4:17ஐ ஆதாரமாகக்கொண்டு, தேவன் கொரோனா கிருமிகள் மூலம் சபையை நியாயந்தீர்க்கின்றார் என்று கூறுகின்றனர். ஏனெனில் இவ்வசனத்தில் "நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங் காலமாயிருக்கிறது" என்று பேதுரு குறிப்பிட்டுள்ளார். ஆனால், இன்று வந்த கொரோனா கிருமிகளின் மூலமான அழிவுடன் பேதுருவின் கூற்றை எவ்விதத்திலும் தொடர்புபடுத்த முடியாது. ஏனெனில், பேதுரு தன்னுடைய காலத்தில் நடைபெற்ற

---

[25] யோவான் 3:17இல், "உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[26] லூக்கா 9:52-56இல், இயேசுகிறிஸ்து "தமக்கு முன்னாகத் தூதர்களை அனுப்பினார். அவர்கள் போய், அவருக்கு இடத்தை ஆயத்தம்பண்ணும்படி சமாரியருடைய ஒரு கிராமத்திலே பிரவேசித்தார்கள். அவர் எருசலேமுக்குப் போக நோக்கமாயிருந்தபடியினால் அவ்வூரார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய சீஷராகிய யாக்கோபும் யோவானும் அதைக் கண்டபோது: ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள். அவர் திரும்பிப்பார்த்து: நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார்."

[27] அப்போஸ்தலர் 17:31இல், "ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்" என்றும், 2பேதுரு 2:9இல், "கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்" என்றும்,

[28] G.D.Fee, *1 & 2 Thessalonians: The New International Commentary on the New Testament*, p. 50.

[29] L.Morris, *Romans: The Pillar New Testament Commentary*, p. 115.

[30] யாக்கோபு 1:2-3இல், "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[31] W.B.Forbush, *Fox's book of Martyrs: A History of the Lives Sufferings and Deaths of the Early Christians and the Protestant Martyrs*, pp. 1-33.

நியாயத்தீர்ப்பைப்பற்றியே கூறுகின்றார். இதனால்தான், "நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்குங் காலமாயிருக்கிறது" என்று நிகழ்காலத்தில் தன்னுடைய காலத்தில் நியாயத்தீர்ப்பு நடைபெறுவதாகப் பேதுரு எழுதியுள்ளார். மேலும், கிறிஸ்தவர்களுக்கு ஏற்படும் பாடுகளை அல்லது அழிவுகளைத் தேவனுடைய நியாயத்தீர்ப்பு என்று கூறுபவர்கள், நியாயத்தீர்ப்பு என்னும் சொல்லைத் தவறாகப் புரிந்து கொண்டவர்களாகவே இருக்கின்றனர். ஏனெனில், பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தண்டனை என்னும் அர்த்தத்திலேயே நியாயத்தீர்ப்பு என்னும் சொல்லை உபயோகிக்கின்றனர். ஆனால், நியாயத்தீர்ப்பு என்பது தண்டனை அல்ல. ஏனெனில், நியாயந்தீர்க்கப்படும்போது கொடுக்கப்படும் தீர்ப்புகளில் ஒன்றே தண்டனையாகும். எனினும் தீர்ப்பு எப்பொழுதும் தண்டனையாக மாத்திரம் இருக்காது. ஏனெனில், குற்றம் செய்தவனுக்கு கொடுக்கப்படும் தீர்ப்பே தண்டனையாகும். ஆனால், குற்றம் செய்யாதவனுக்கு கொடுக்கப்படுவது தண்டனை அல்ல. எனவே, நியாயத்தீர்ப்பு ஒன்றில் தண்டனையாக இருக்கும். அல்லது விடுதலையாக இருக்கும். ஆனால், நியாயத்தீர்ப்பு என்றால் தண்டனை என்னும் தவறான எண்ணமுடையவர்களாகக் கிறிஸ்தவர்கள் இருப்பதினாலேயே உலகத்தில் எத்தகைய அழிவு வந்தாலும் அதைத் தேவனுடைய தண்டனையாகவே பார்க்கின்றனர்.

பேதுரு தன்னுடைய முதலாவது நிருபத்தின் நான்காம் அதிகாரம் 17ஆம் வசனத்தில் என்ன சொல்கின்றார் என்பதை சரியான விதத்தில் அறிந்துகொள்வதற்கு, அவர் எத்தகைய சூழ்நிலையில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு இந்நிருபத்தை எழுதியுள்ளார் என்பதை நாம் முதலில் அறிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், முதலாம் நூற்றாண்டின் சின்ன ஆசியாவின் ஐந்து மாகாணங்களில் சிதறிப்போயிருந்த கிறிஸ்தவர்களுக்கு இந்நிருபத்தை எழுதும் பேதுரு (1பேது.1:1),[32] அவர்கள் "பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறார்கள்" (1பேது.1:6)[33] என்பதை அறியத்தருகின்றார். எனினும், அவர்கள் பாவம் செய்ததினால் அல்ல, "நீதியினிமித்தம் பாடுபடுகிறவர்களாகவும்" (1பேது.3:14),[34] "நன்மை செய்தும் பாடனுபவிப்பவர்களாகவும்" (1பேது.3:17),[35] "கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்படுகிறவர்களாகவும்" (1பேது.4:14),[36] "கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளிகளாகத் (1பேது,4:13),[37] "தேவனுடைய சித்தத்தின்படி பாடனுபவிப்பவர்களாகவும் இருந்தனர் (1பேது.4:19).[38] இதனால், நன்மை செய்கிறவர்களாகத் தேவனுடைய சித்தத்தின்படி இயேசுகிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளிகளாகப் பாடுபட்ட வர்கள் நியாயந்தீர்க்கப்பட்டுத் தண்டிக்கப்படுகிறார்கள் என்று கூறமுடியாது. எனவே, அவர்களுடைய பாடுகளாக, "உங்களை சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினி" (1பேது.4:12) என்று பேதுரு எதைப்பற்றி கூறுகிறார் என்பதை அறியாதவரையில் அவர் குறிப்பிடும் நியாயத்தீர்ப்பு என்ன என்பதையும் நம்மால் அறிந்துகொள்ள முடியாது.

அப்போஸ்தலனாகிய பேதுரு தன்னுடைய முதலாவது நிருபத்தை எழுதிய காலத்தில் கிறிஸ்தவர்கள் நீரோ என்னும் ரோம அரசனால் கொடூரமான முறைகளில் மூர்க்கத்தனமாக சித்திரவதை செய்யப்பட்டு வந்தனர். ஏனெனில், கி.பி.64ஆம் ஆண்டு ஜூலை மாதம் ரோம் நகரம் முழுமையாக தீயினால் அழிந்தபோது, அதற்குக் கிறிஸ்தவர்களே காரணம் என்று அவர்கள் மீது அபாண்டமான பழி சுமத்தப்பட்டு அவர்கள் தண்டிக்கப்பட்டனர். இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில் இருந்த கிறிஸ்தவர்களைப் பெலப்படுத்துவதற்காக இந்நிருபத்தை எழுதும் பேதுரு, அவர்கள் எதிர்நோக்கிய கோர மரணத்தையே "உங்களை சோதிக்கும்படி உங்கள்

---

32 1பேதுரு 1:1இல், "இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு, பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா தேசங்களிலே சிதறியிருக்கிறவர்களில்" என்று எழுதும் போது, அக்கால ரோம மாகாணங்களாக இருந்த இப்பிரதே சங்களில் வாழ்ந்தவர்களுக்கு இந்நிருபத்தை எழுதியுள்ளார் என்பதை அறியத்தரு கின்றார். இவைகள் தற்கால துருக்கி நாட்டின் வடபகுதியில் இருக்கின்றன.

33 1பேதுரு 1:6இல், "இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள். என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவித மான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

34 1பேதுரு 3:14இல், "நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாய் இருப்பீர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

35 1பேதுரு 3:17இல் "நன்மை செய்து பாடனுபவிப்பது மேலானது" என்கிறார்.

36 1பேதுரு 4:14இல் "நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

37 1பேதுரு 4:13இல், "கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப் படுங்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

38 1பேதுரு 4:19இல், "ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்" என்று கூறுகிறார்

நடுவில் பற்றியெரிகிற அக்கினி" என்று நிகழ்காலத்தில் குறிப்பிட்டுள்ளார்.[39] அதாவது, ரோம் நகரம் தீப்பற்றியெரிந்தபோது அதற்கு கிறிஸ்தவர்களே காரணம் என்று கூறிய நீரோ, கிறிஸ்தவர்களைக் கொல்லும்போது, அவர்களை உயிரோடு கம்பங்களில் கட்டி வைத்து எரித்து, அவர்களை இரவு நேரத்தில் வீதிகளுக்கும் பூங்காக்களுக்கும் உல்லாச விடுதிகளுக்கும் வெளிச்சம் கொடுக்கும் தீவட்டிகளாக உபயோகித்தான்.[40] உண்மையில், இதைத்தான் பேதுரு "உங்கள் நடுவிலே பற்றியெரிகிற அக்கினி" (1பேது.4:12) என்று குறிப்பிட்டுள்ளார்.[41] ஆரம்பத்தில் ரோம் நகரில் ஆரம்பமான இத்தகைய கொடூரச் சித்திரவதை நீரோவின் ஆட்சிக்காலத்தில் ரோம ராட்சியத்தின் ஏனைய பகுதிகளிலும் நடைபெற்றது. எனவே, பேதுருவின் வாசகர்கள் பாவம் செய்ததினால் பாடுபடுகிறவர்களாக இருக்கவில்லை. இதனால், பேதுரு குறிப்பிடும் "தேவனுடைய வீட்டில் துவங்கிய நியாயத்தீர்ப்பு" பாவத்திற்கான தண்டனை அல்ல. எனவே, 1பேதுரு 4:17ஐ ஆதாரமாகக்கொண்டு, தேவன் பாவத்திற்காக சபையைத் தண்டிக்கிறார் என்று எவ்விதத்திலும் கூறமுடியாது.

1பேதுரு 4:7ஐ மாத்திரம் தனியாக எடுத்துக் கூறப்படும் விளக்கங்கள் அனைத்தும் பேதுரு இவ்வசனத்தில் எழுதியுள்ளதைச் சரியாக அறியாமல் கூறப்படும் தவறான கருத்துகளாகவே உள்ளன. ஏனெனில், இவ்வசனம் இதற்கு முன்னும் பின்னும் உள்ள வசனங்களுடன் தொடர்புற்றுள்ளது. உண்மையில், மூலமொழியில் இவ்வசனம் 12ஆம் வசனத்திலிருந்து ஆரம்பமாகி 19ஆம் வசனத்தில் முடிவடையும் ஒரு பந்தியின் இடையில் உள்ள ஒரு வாக்கியமாகும்.[42] இதனால், "சபையைத் திருத்தும் சிட்சைகளாக வந்த பாடுகளையே பேதுரு இவ்வசனத்தில் நியாயத்தீர்ப்பு என்று குறிப்பிட்டுள்ளார்"[43] என்னும் சிலரது விளக்கமும் தவறானதாகவே உள்ளது. ஏனெனில், வேதாகம சத்தியத்தின்படி தவறுகளைத் திருத்துவதற்காகவே சிட்சை வருகிறது. ஆனால், பேதுருவின் வாசகர்கள் தவறு செய்து சிட்சிக்கப்படுகிறவர்களாக அல்ல, அவர்கள் நன்மை செய்தும் பாடுபடுகிறவர்களாக, அதாவது, கிறிஸ்தவர்களாய் இருப்பதினால் கொடூரமான முறையில் மரிப்பவர்களாக இருந்தனர்.

வேதாகம சத்தியத்தின்படி நியாயத்தீர்ப்பு உலகின் இறுதியிலேயே நடைபெறுவதாய் இருந்தாலும், பேதுருவின் வாசகர்கள் இரத்த சாட்சிகளாக மரிக்கிறவர்களாக இருந்ததினால், அவர்களுடைய காலத்திலேயே அவர்கள் இருக்கும் சபையிலேயே அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கப்படத் தொடங்கி விட்டது என்று பேதுரு கூறுகின்றார். எனினும், அவர்களுக்கு

---

[39] J.MacArthur, *John MacArthur Bible Commentary*, pp. 1900, 1919; R.C.H.Lenski, *The Interpretation of the Epistles of Peter, John and Jude*, pp. 201-202; R.Skaggs, *1Peter 2Peter Jude: The Pentecostal Commentary*, pp. 62-62; N.Hillyer, *1 and 2 Peter, Jude: New International Commentary*, p. 130; W.W.Wiersbe, *Be Hopeful: An Expository Study of 1Peter*, p. 112; F.W.Beare, *1Peter: The Greek Text with Introduction and Notes*, pp. 162-164.

[40] J.F.Walvoord & R.B.Zuck, ed., *The Bible Knowledge Commentary – New Testament*, p. 854.

[41] சில ஆராய்ச்சியாளர்கள், நீரோவின் ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு உபத்திரவங்கள் வருவதற்கும் முன்பு, அல்லது அதற்கும் நீண்ட காலத்திற்கும் பின்பே பேதுரு இந்நிருபத்தை எழுதியுள்ளதாகக் கருதுவதினால், இந்நிருபத்தில் கிறிஸ்தவர்களுக்கு சாதாரணமாக ஏற்பட்ட உபத்திரவங்களைப்பற்றியே எழுதப்பட்டுள்ளது என்று வாதிடுகின்றனர் (T.R.Schreiner, *1,2 Peter, Jude: The New American Commentary*, pp. 36-37, 219; J.N.D.Kelly, *Epistles of Peter and Jude: Black's New Testament Commentary*, pp. 27-30, 183-184; J.R.Michaels, *1Peter: Word Biblical Commentary Volume 49*, p. 258). ஆனால், 1பேதுரு 4:12இல் "பற்றியெரிகிற அக்கினி" என்பதற்குப் பேதுரு உபயோகித்துள்ள கிரேக்கச் சொல் புதிய ஏற்பாட்டில் இவ்வசனத்திலும், வெளிப்படுத்தல் 18:9, 18:10இலும் மாத்திரமே உள்ளது. இவ்வசனங்களில் தமிழில் "வேகிறது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள இச்சொல்லை, யூதவரலாற்றாசிரியர் ஜோசீப்பஸ், சோதோம் கொமோரோ நகரங்கள் எரிந்ததற்கு உபயோகித்துள்ளார் (F.Josephes, *Antiquities of Jews*. 1.11.4) எனினும், பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் இச்சொல் நீதிமொழிகள் 27:21இல் உலோகங்கள் சுத்திகரிக்கப்படுவதற்காக அக்கினியில் புடமிடுவதற்கு உபயோகிக் கப்பட்டுள்ளதினால், பேதுருவும், முதலாம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள விதமாக, சாதாரணமான பாடுகளைக் குறிப்பிடவே நான்காம் அதிகாரத்திலும் இச்சொல்லை உபயோகித்துள்ளதாகச் சிலர் கருதுகின்றனர். ஆனால், பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பை ஆதாரமாகக் கொண்டு இச்சொல்லின் அர்த்தத்தை அறிவதைவிட, ஆவியானவரினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டில், வெளிப்படுத்தலிலும் 1பேதுருவிலும் இச்சொல் ஒரே அர்த்தமுடையதாக இருப்பது போல மொழிபெயர்ப்புகளில் இருப்பதில்லை என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியம். மேலும், பேதுரு இச்சொல்லை முதலாம் அதிகாரத்தில் உபயோகிக்கவில்லை. இதனால், முதலாம் அதிகாரத்திலும் நான்காம் அதிகாரத்தி லும் பேதுரு ஒரேவிதமான பாடுகளைக் குறித்தே எழுதியுள்ளார் என்று கூறமுடியாது. நான்காம் அதிகாரத்தில் அவர் உபயோகித்துள்ள சொல் வெளிப்படுத்தலில் மாத்திரம் இடம்பெறுவதினால், இவ்விரண்டு இடங்களிலும் இச்சொல் அக்கினியால் எரிவதையே குறிக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை.

[42] I.H.Marshall, *1Peter, The IVP New Testament Commentary*, p. 156; T.R.Schreiner, 1,2,Peter, *Jude: The New American Commentary*, p. 226.

[43] W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 2279; J.F.Walvoord & R.B.Zuck, ed., *The Bible Knowledge Commentary – New Testament*, p. 855.

கொடுக்கப்பட்ட தீர்ப்பு தண்டனை என்று பேதுரு கூறவில்லை. ஏனெனில், அக்காலத்தில் இரத்தசாட்சிகளாக மரிப்பவர்கள் தேவனால் தண்டிக்கப்படுகிறவர்களாக அல்ல, ஸ்தேவானைப் போல இயேசுகிறிஸ்துவினால் பரலோகத்திற்கு வரவேற்கப்படுகிறவர்களாகவே இருந்தனர். இதனால்தான் வழக்கமாகப் பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருப்பவராகச் சித்தரிக்கப்படும் இயேசுகிறிஸ்து, ஸ்தேவனான் மரித்தபோது எழுந்து நிற்கிறவராகக் காணப்பட்டார் (அப்.7:55-56).[44] இதைப்போலவே அக்கால சபைகளில் இரத்த சாட்சிகளாக மரிப்பவர்களை இயேசுகிறிஸ்து தம்மிடம் வரவேற்றதினால்,[45] நியாயத்தீர்ப்பு தேவனுடைய சபையில் துவக்குங் காலமாயிருக்கிறது என்று பேதுரு குறிப்பிட்டுள்ளார். அதாவது அவர்கள் பரலோகத்திற்குச் செல்கின்றார்கள் என்பதைப் பேதுரு அறிந்திருந்ததினால், அவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு விட்டார்கள் என்று பேதுரு கூறுகிறார். எனவே, இதை அறியாத நிலையில் 1பேதுரு 4:17ஐ ஆதாரமாகக்கொண்டு தேவன் கொரோனா கிருமிகள் மூலம் அல்லது வேறு அழிவுகள் மூலம் சபையைத் தண்டிக்கிறார் என்று கூறுவது அறியாமையும் அறிவீனமுமான தவறாகவே உள்ளது.

ஆன்லைன் ஆராதனைகள் சபையை அவசியமற்றதாக்கிவிடவில்லை

கொரோனா கிருமிகள் ஆலயக் கதவுகளை மூடிவிட்டதினால், கிறிஸ்தவ சபைகள் ஆன்லைனில் (இணையத்தில்) ஆராதனைகளை நடத்தத் தொடங்கியுள்ளன. உண்மையில், கொரோனா கிருமிகள் வருவதற்கும் முன்பே சிலர் ஆன்லைனில் ஆராதனை நடத்தி, திருவிருந்து கொடுத்து, காணிக்கையும் சேகரித்து வந்திருந்தாலும், தற்பொழுது எல்லா சபைகளுமே ஆன்லைனில் செயல்பட வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால், ஆலயங்கள் மூடப்பட்டாலும், ஒவ்வொரு வீடும் அலயமாகிவிட்டது என்று பெருமிதம் கொள்பவர்களாகக் கிறிஸ்தவர்கள் இருக்கின்ற போதிலும், ஆலயங்கள் இனிமேல் தேவையில்லை என்றும் வீட்டில் இருந்து ஆராதிப்பதே அப்போஸ்தலர் காலத்திலிருந்த ஆதிசபையின் நடைமுறை என்றும் சிலர் கூறுவது வேதாகம சத்தியத்தை அறியாத முற்றிலும் தவறான ஒரு போதனையாகவே உள்ளது. கொரோனா கிருமிகள் வருவதற்கும் முன்பே இத்தகைய தவறான போதனை ஒருசிலரிடம் காணப்பட்டாலும், தற்பொழுது இவர்கள் தங்களுடைய கருத்தே சரியானது என்றும், ஆலயத்தில் கூடுவது வேதாகமத்திற்குப் புறம்பானது என்பதினால்தான் தேவன் ஆலயங்களை மூடிவிட்டார் என்றும் வாதிடுகின்றனர். ஆனால், இவர்கள் அப்போஸ்தலர் காலத்தில் சபைகள் எவ்வாறு செயற்பட்டன என்பதை அறியாததினாலேயே இவ்வாறு தாறுமாறாகவும் தவறாகவும் போதிக்கின்றனர்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திலும் பவுலின் நிருபங்களிலும் அக்காலத்தில் வீடுகளிலேயே சபைகள் கூடிவந்தன என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் (ரோ.16:5, 1கொரி.16:19),[46] இவ்வீட்டுச் சபைகளில் ஒரு குடும்பத்தினர் மாத்திரம் ஞாயிற்றுக் கிழமைகளில் தேவனை ஆராதிப்பவர்களாக இருக்கவில்லை. அதாவது, இன்றைக்கு ஒரு குடும்பத்தினர் மாத்திரம் தங்களுடைய வீட்டிலிருந்து ஆன்லைனில் ஆராதனையைப் பார்ப்பதுபோல அக்காலத்தில் ஒரு வீட்டில் ஒரு குடும்பம் மாத்திரம் தேவனை ஆராதிக்கவில்லை. பல குடும்பங்கள் ஒரு வீட்டில் சபையாகக்கூடி ஆராதிக்கும் முறையே அக்காலத்தில் இருந்தது. ஏனெனில், அக்காலத்தில் பெரிய ஆலயக் கட்டிடங்கள் எதுவும் கிறிஸ்தவர்களிடத்தில் இருக்கவில்லை. இது சபையின் ஆரம்ப காலம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இதனால், ஆரம்ப காலத்தில் இரட்சிக்கப்படுகிறவர்கள் தாங்கள் வாழும் பிரதேசத்தில் இருந்த வீடொன்றிலேயே சபையாகக் கூடிவந்தார்கள். மேலும், கி.பி.4ஆம் நூற்றாண்டில் கொண்ஸ்டன்டைன் என்னும் ரோம அரசன் கிறிஸ்தவனாகும் வரை, கிறிஸ்தவர்கள் ரோம அரசினால் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். இதனால், ஆலயங்களைக் கட்டி தேவனை ஆராதிக்கக்கூடிய சூழ்நிலை அக்காலத்தில் இருக்கவில்லை. இதனால்தான் அவர்கள்

---

[44] அப்போஸ்தலர் 7:55-56இல், "அவன் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு: அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[45] இரத்த சாட்சிகளாக மரிப்பவர்கள் மாத்திரமல்ல, இயேசுகிறிஸ்துவுக்குள் மரிக்கும் அனைவரும், மரணமடையும்போது அவரிடமே செல்கின்றனர். இதைப் பற்றிய வேதாகம சத்தியத்தை முழுமையாக அறிந்துகொள்வதற்கு எனது "மரணத்தின் மறுபக்கம்" என்னும் நூலைப் பார்க்கவும்.

[46] 1கொரிந்தியர் 16:19இல், ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தங்கள் வீட்டிலே கூடுகிற சபையோடுங்கூடக் கர்த்தருக்குள் உங்களை மிகவும் வாழ்த்துகிறார்கள்" என்றும், ரோமர் 16:5இல் "அவர்களுடைய வீட்டிலே கூடிவருகிற சபையையும் வாழ்த்துங்கள்" என்றும் பவுல் குறிப்பிட்டுள்ளார்.

வீடுகளில் சபையாகக் கூடி வந்தனர். இதை அறியாத நிலையில் ஆலயத்தில் சபையாகக் கூடிவருவது வேதாகமத்திற்கு முரணானது என்றும், இதை நமக்குக் காண்பிப்பதற்காகவே தேவன் ஆலயக் கதவுகளை மூடிவிட்டார் என்றும் கூறுவது முற்றிலும் தவறாகும்.

தற்காலத்தில் கிறிஸ்தவர்கள் ஆன்லைனில் ஆராதனைகளை நடத்தி வந்தாலும், ஆன்லைனில் திருவிருந்து கொடுப்பது அர்த்தமற்ற செயலாகவே உள்ளது. ஏனெனில், வேதாகம காலத்தில் திருவிருந்து என்பது இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் மூலம் தங்களுக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட ஐக்கியத்தைக் கிறிஸ்தவர்கள் வெளிப்படுத்தும் செயலாகவே இருந்தது. இதனால்தான், அக்காலத்தில் கிறிஸ்தவர்கள் ஒன்றாயிருந்து சாப்பிடுவதே திருவிருந்தாய் இருந்தது. ஏனெனில், யூதர்களின் காலாசாரத்தில் ஒன்றாயிருந்து சாப்பிடுவது ஐக்கியத்தின் அடையாளமாய் இருந்தது. ஆனால், அக்காலத்தில் யூதர்களும் புறஜாதியாரும் ஒன்றாயிருந்து சாப்பிடுவது நடைமுறையில் சாத்தியப்படாத காரியமாகவே இருந்தது. ஏனெனில், யூதர்கள் புறஜாதியாரை அசுத்தமானவர்க ளாகக் கருதியதினால் அவர்களுடன் ஒன்றாயிருந்து சாப்பிடுவதில்லை. ஆனால், இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் யூதரையும் புறஜாதியாரையும் ஒன்றாக்கியதினால் (எபே.2:12-16),[47] இதை வெளிப்படையாகக் காண்பிக்கும் விதத்தில் கிறிஸ்தவர்களாகிய யூதர்களும் புறஜாதியாரும் திருவிருந்து பெறும்போது ஒன்றாயிருந்து சாப்பிட்டனர். இத்தகைய போஜன ஐக்கியம் அக்கால கிறிஸ்தவத்தில் மிகவும் முக்கியமானதாக இருந்ததினால்தான், எருசலேமலிருந்து வந்திருந்த யூத கிறிஸ்தவர்களக்குப் பயந்து புறஜாதியாருடன் ஒன்றாயிருந்து சாப்பிடுவதற்கு மறுத்த பேதுரு பவுலினால் பகிரங்கமாகக் கடிந்துகொள்ளப்பட்டார் (கலா.2:11-14).[48] மேலும், கிறிஸ்தவர்களாகிய யூதர்கள் புறஜாதியாருடன் மாத்திரமல்ல, யூதராகிய தாங்கள் மாத்திரமே சபையில் இருந்த ஆரம்ப நாட்களிலும், இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் மூலம் தங்களுக்கிடையில் ஏற்பட்ட ஐக்கியத்தை வெளிப்படுத்தம் விதத்தில் வீடுகளில் “அப்பம்பிட்டு போஜனம் பண்ணினார்கள்” என்பதை அப்போஸ்தலர் 2:46 அறியத்தருகின்றது.

இயேசுகிறிஸ்து நமக்கருளும் இரட்சிப்பு நம்மைத் தேவனுடன் மாத்திரமல்ல, இரட்சிக்கப்பட்ட ஏனைய மனிதர்களுடனும் ஒப்புரவாக்குவதினால் (எபே.2:14-16), ஆதிசபையில் திருவிருந்தானது இத்தகைய ஒப்புரவாக்குதலை வெளிப்படுத்திக் காண்பிக்கும் விதத்தில், கிறிஸ்தவர்கள் ஓரிடத்தில் ஒன்றாகக் கூடிவரும்போதே கொடுக்கப்பட்டதோடு, இது ஒன்றாயிருந்து சாப்பிடுவதையும் உள்ளடக்கிய போஜனமாய் இருந்தது (1கொரி.11:20-21).[49] இதனால், ஒரு குடும்பம் மாத்திரம் தனியாக வீட்டிலிருந்து திருவிருந்து பெறும் முறை அக்காலத்தில் இருக்கவில்லை. ஏனெனில், இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியினால், கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் ஒரே சரீரமாக இணைக்கப்பட்டிருக்கிறோம் என்பதினால், ஒரு அப்பத்தை எல்லோரும் உட்கொள்ளும் செயல்முறையாகவே திருவிருந்து இருந்தது. இதனால்தான், “அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்” (1கொரி.10:17) என்று பவுல் குறிப்பிட்டுள்ளார். எனவே, ஆன்லைனில் ஒவ்வொருவரும் தங்களுடைய வீட்டில் இருந்தவாறே தங்களிடம் இருக்கும் ஏதாவது ஒரு அப்பத்தை உட்கொள்வது பவுல் குறிப்பிடும் விதமாக ஒரு அப்பத்தில் எல்லோரும் பங்குபெறுவதாகவும், கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரோடொருவர் இருக்கும் ஐக்கியத்தை

---

[47] இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியில் யூதர்களும் புறஜாதியாரும் ஒப்புரவாக் கப்பட்டுள்ளதை அறியத்தரும் பவுல், “முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். எப்படி யெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீர மாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்” என்று எபேசியர்2:13-16இல் குறிப்பிட்டுள்ளார்.

[48] கலாத்தியர் 2:11-14இல், “பேதுரு அந்தியோகியாவுக்கு வந்தபோது, அவன்மேல் குற்றஞ் சுமந்ததினால், நான் முகமுகமாய் அவனோடே எதிர்த்தேன். எப்படியெனில், யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்குமுன்னே அவன் புறஜாதியாருடனே சாப்பிட்டான். அவர்கள் வந்தபோதோ, விருத்தசேதனமுள்ளவர்களுக்குப் பயந்து விலகிப் பிரிந்தான். மற்ற யூதரும் அவனுடனேகூட மாயம்பண்ணினார்கள்ளூ அவர்களுடைய மாயத்தினாலே பர்னபாவும் இழுப்புண்டான். இப்படி அவர்கள் சுவிசே‘த்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததை நான் கண்டபோது, எல்லாருக்கும் முன்பாக நான் பேதுருவை நோக்கிச் சொன்னது என்னவென்றால்” என்று பவுல் பெதுருவைக் கடிந்துகொண்டார்.

[49] இதனால்தான் கர்த்தருடைய பந்தியில் அபாத்திரமாய் பங்கேற்றவர்களைக் கடிந்துகொள்ளும்போது, “நீங்கள் ஓரிடத்தில் கூடிவரும்போது, அவனவன் தன்தன் சொந்த போஜனத்தை முந்திச் சாப்பிடுகிறான்ளூ ஒருவன் பசியாயிருக்கிறான். ஒருவன் வெறியாயிருக்கிறான். இப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போஜனம் பண்ணுதலல்லவே. புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா?” என்று பவுல் கேட்டுள்ளார்.

வெளிப்படுத்தும் செயல்முறையாகவும் இருக்காது. இதனால், ஆன்லைன் திருவிருந்து அர்த்தமற்றதாகவும் அவசியமற்றதாகவுமே உள்ளது.

தற்காலத்தில் நடைபெறும் ஆன்லைன் ஆராதனைகள் தற்காலிகமான செயல்முறையாகவே உள்ளன. இதனால், ஆன்லைனில் ஆராதிக்கலாம் என்பதினால் சபைகூடிவருதல் அவசியமற்றது என்று எண்ணுபவர்கள் கிறிஸ்தவத்தின் அடிப்படை சத்தியத்தையே அறியாதவர்களாக இருக்கின்றனர். ஏனெனில், இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியின் மூலம் ஒருவன் தேவனுடன் ஒப்புரவாக்கப்படும் செயல்முறையானது, அவருடன் ஒப்புரவாக்கப்பட்டுள்ள மற்றவர்களுடனும் ஐக்கியமாய் இருப்பதையும் உள்ளடக்கியுள்ளது. இதனால்தான், கண்களினால் காணும் சகோதரனுடன் உறவற்ற நிலையில் தேவனுடன் உறவுள்ளவர்களாக இருக்கமுடியாது என்று வேதாகமம் கூறுகிறது (1யோவா.2:9-11, 3:14-15, 4:20-21).[50] எனவே, சபை ஐக்கியத்தைத் தவிர்த்து ஆன்லைனில் ஆராதிப்பது தற்போதைய சூழ்நிலைக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள தற்காலிக நடைமுறையாக மாத்திரம் இருக்கவேண்டுமே தவிர, இதுவே வழக்கமான வழிபாட்டு முறையாகி விடக் கூடாது. ஏனெனில், கிறிஸ்தவர்களாகிய நாம் சபை கூடிவருதலை விட்டுவிடாதிருக்க வேண்டும் என்றே வேதாகமம் அறிவுறுத்துகிறது (எபி.10:25). மேலும், தற்காலத்தில் ஆன்லைனில் ஆராதனை நடத்துபவர்கள், தங்களுடைய சபை விசுவாசிகளுக்கே அதைச் செய்யவேண்டும். ஏனெனில், சபையின் மேய்ப்பராய் இருப்பவர்கள் தேவன் தங்களுடைய சபைக்கு கொடுத்துள்ள விசுவாசிகளின் வாழ்வுக்கு மாத்திரமே பொறுப்பானவர்களாக இருக்கின்றனர் என்பதை நாம் மறக்கலாகாது (1பேது.5:1-3, அப்.20:28).[51]

ஆன்லைன் ஆராதனைகள் தற்காலிகமான ஏற்பாடாக இருப்பதினால், விரைவில் ஆலயக் கதவுகள் திறக்கப்படவுடன் மறுபடியுமாக நாம் சபையாகக்கூடி தேவனை ஆராதிக்கவேண்டியது அவசியம். தற்காலத்தில் ஆலயக் கதவுகள் மூடப்பட்டிருப்பதினால், சபை அழிந்துபோய் விடவில்லை. ஏனெனில், சபை ஒருக்காலத்திலும் அழிந்து போகாத இயேசுகிறிஸ்துவின் சரீரமாய் இருக்கின்றது (மத்.16:18). மேலும், கொரோனா கிருமிகளைக் கொண்டுவந்து தேவன் சபையைத் தண்டிக்கவுமில்லை. ஏனெனில், இக்கிருமிகள் சபையை மாத்திரமல்ல, முழு உலகத்தையும் பாதித்துள்ளது மாத்திரமல்ல, தேவனுடைய திட்டத்தின்படி நியாயத்தீர்ப்பு உலகத்தின் முடிவிலேயே நடைபெறும். எனவே, தற்காலத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலை கொரோனா தொற்றுக்கு தடுப்பு மருந்து கொடுத்த பின்னர் இல்லாமற்போய்விடும். இதைப்போன்ற நெருக்கடியான சூழ்நிலை இதற்கு முற்பட்ட காலத்திலும் பல தடவைகள் ஏற்பட்டுள்ளதினால், தற்கால நிலைமையை எண்ணி எல்லாமே முடிந்துவிட்டது என்று கலக்கமடையாமல், வேதாகம சத்தியங்களைச் சரியானவிதத்தில் புரிந்துகொண்டு மறுபடியும் சபையாகக் கூடும் நாள் விரைவில் வருவதற்காக நாம் ஜெபிக்கிறவர்களாகவும் இருக்கவேண்டும். மேலும், தற்கால நெருக்கடியான சூழ்நிலை கிறிஸ்தவர்களுடைய உள்ளத்தில் ஏற்படுத்தியுள்ள சகலவிதமாக கேள்விகளுக்கும் வேதாகமத்தின் வெளிச்சத்தில் பதில்களைப் பெற்றுக்கொள்வதற்கு எனது ‘‘கொரோனா கிருமிகளும் கொல்லப்பட்ட கிறிஸ்தவர்களும்’’ என்னும் நூலைப் பார்க்கவும்.

---

[50] 1யோவான் 2:9-11இல், ‘‘ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான். தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான். அவனிடத்தில் இடறல் ஒன்றுமில்லை. தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான். இருளானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால் தான் போகும் இடம் இன்னதென்று அறியாதிருக்கிறான்’’ என்றும், 1யோவான் 3:14-15இல், ‘‘நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம். சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான். தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனு கொலைபாதகனாயிருக்கிறான். மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள்’’ என்றும், 1யோவான் 4:20-21இல், தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன். தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்’’ என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[51] இதனால்தான், சபையின் மேய்ப்பர்களுக்கு அறிவுறுத்தல்கள் கொடுத்தபோது, ‘‘உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்’’ (அப். 20:28), என்று கூறிய பவுல், சபை விசுவாசிகளிடம் பேசும்போது, ‘‘உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்கள்’’ (எபி.13:17) என்று குறிப்பிட்டுள்ளார்.